# பத்துப்பாட்டில் நிலவியல் பண்பாடு

*முனைவர் சி. பொற்கை ஆதிரை*
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதி)
பூசாகோ கலை அறிவியல் கல்லூரி, கோவை
https://doi.org/10.5281/zenodo.14383331

***ஆய்வுச்சுருக்கம்***
*இலக்கியங்கள்மனித சமூகச் சிந்தனைகளை ஓருமித்து உரைக்கக்கூடியன. அந்தந்த இனமக்களின் பண்பாட்டுக் கருத்தாக்கங்களுக்கு ஏற்ப அவர்கள் உருவாக்கும் இலக்கியப்; பொருண்மைகளும் உள்ளன. அவ்வாறு உருவாகும் இலக்கியங்கள் பல்வேறு சமூகக் கருத்தாக்கங்களைக் கொண்டு விளங்குகின்றன. இவ்வகையில், தமிழ் இலக்கியங்கள் தொடர்ந்து மேம்பட்டு வருவதை உணரமுடிகிறது. தமிழ்மொழியில் நிலைபேறுடைய இலக்கியங்களாகச் சொல்லப்படுவன சங்க இலக்கியங்கள். அவற்றுள் ஓன்றான பத்துப்பாட்டு; பலநிலைகளில் சிறப்பானதாக கருத இடமளிக்கிறது. பத்துபாட்டில் இடம்பெறும் இலக்கியங்கள் நிலவியல் சார்ந்த கருத்துகளை நிரம்பப் பெற்றுள்ளன. அதிலும் ஆற்றுப்படை இலக்கியங்கள் பழந்தமிழ் நிலப்பரப்பையும் நில அமைப்பினையும் பதிவு செய்துள்ளன. இந்த அடிப்படையில் பழந்தமிழரின் நிலவியல் சார்ந்த பண்பாட்டு வாழ்வியல் சிந்தனைகளின் நிலைகளை நிறுவ இக்கட்டுரை முயல்கிறது.*
***குறிப்புச்சொற்கள்*** *– பத்துப்பாட்டு, நிலவியல், தொல்காப்பியம், பண்பாடு, முப்பொருள்*

*இலக்கியம் என்பது மக்கள் வாழ்க்கையிலிருந்து மக்களுக்காகவே, மக்களால் உருவாக்கம் பெறுகிறது. எனினும் அந்தந்த இனமக்களின் பண்பாட்டுச் சூழல்களுக்கு ஏற்ப அவர்களின் இலக்கியப்; பொருண்மைகள் பலநிலைகளில் இடம்பெறுகின்றன. அவ்வகையில், வாழும் இலக்கியங்களின் பாடுபொருள்கள் உலகப்பார்வை கொண்ட, பொதுமையாகவும் அத்தகைய பொருண்மைகளால்; அமைந்த இலக்கியங்களே காலத்தையும் இடத்தையும் கடந்து நிலைப்பெறுகின்றன. தமிழ்மொழியில் நிலைபேறுடைய இலக்கியங்களுள் சங்க இலக்கிய - பத்துப்பாட்டும் பல்வேறு தளங்களில் சிறப்பானதாக உள்ளது.*

## தொல்காப்பியம் - முப்பொருள்

*உலகிலுள்ள அனைத்துப் பொருள்களும் உயிர்களின் வாழ்வு பொருட்டே உள்ளன. தொல்காப்பியரின் முப்பொருள் பண்பாடு இந்த உண்மையை உணர்த்துகிறது. உலகப் பொருள்களான முதற்பொருளும் கருப்பொருளும் உள்ளடங்கிய மனித வாழ்க்கையே (உரிப்பொருள்) இலக்கியங்களின் பாடுபொருள்களாக* (Content) *அமைகின்றன. தொல்காப்பியம்,*

> ***முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே***
> ***நுவலுங்காலை முறை சிறந்தனவே***
> ***பாடலுள் பயின்றவை நாடும் காலை***
> ***- தொல்.பொருள்.அகத்.நூ.3***

*என்று இந்த மூன்று பொருள்களும் இலக்கியத்துள் அமைதல் வேண்டும் என இலக்கணம் வகுக்கிறது. இவற்றுள் திணைக்குரிய ஒழுக்கங்கள் சிறுபான்மை மயங்கி நிகழ்தலும் உண்டு. ஆனால் நிலங்கள் தம்முள் மயங்குதல் (தொல். பொருள். அகத். நூ. 14) இல்லை என்றும் விளக்குகிறது.*

*உலகச் செயல்கள் அனைத்திற்கும் ‘நிலமும் பொழுதும்’ அடிப்படையாகத் திகழ்கின்றன.*

இதனைத் தொல்காப்பியம் முதற்பொருள் (தொல்.பொருள்.அகத்.நூ.04) என்கிறது. இம்முதற்பொருள்களின் சூழலைக் கட்டுப் படுத்தும் தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, தொழில், பண், பூ, நீர், முதலியன (தொல். பொருள். அகத். நூ. 20) கருப்பொருள்களாகின்றன.

இக்கருப்பொருள்களின் பண்புகள் அந்தந்த நிலங்களில் வாழும் மக்களின் ஒழுக்கங்களை உரிப்பொருளாக வரையறுக்கின்றன. இத்தகு முதல், கரு, உரி ஆகிய மூன்றினையும் தொல் காப்பியம் முப்பொருள் எனக் குறிப்பிடுகிறது.

அகவொழுக்கம் நிகழும் நிலத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைப் போக்கைக் கட்டுப்படுத்துவன, அந்நிலத்தின் கருப் பொருள்களேயாகும். இக்கருப்பொருள் பற்றிய வருணனைகள் இலக்கிய மாந்தரின் கூற்றுக்கள் வழியாக வெளிப்படுகின்றன. இவையே மனித உணர்வுகளை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் புலப்பட வைக்கும் உத்தியாகப் புலவோர்களால் கையாளப்பட்டுள்ளன. செய்யுள்உறுப்புக்கள் முப்பத்துநான்கில் ஒன்று 'கூற்று' (தொல். பொருள். செய்யு. நூ. 180-186). அகப்பாடல்களில் இக்கூற்றுக்களின் வழி கருப்பொருட்கள் உவமைகளாகவும், உருவகங்களாகவும், உள்ளுறையாகவும், இறைச்சியாகவும் பயன் கொள்ளப் பட்டுள்ளன. பாடலின் பொருள் விரிவுக்கும், பொருளின் ஆழத்திற்கும் கருப்பொருட்களே அடிப்படைகளாகின்றன. அவற்றின் தன்மை, செயல்பாடு, இயக்கம், தோற்றம் யாவும் பின்னணியாகவும், உள்ளுறையாகவும், இறைச்சியாகவும் அமைந்து பாடற்பொருளின் ஊடுபொருளாகத் தோன்றுகின்றன. புறவொழுக்கத்திலும் கருப்பொருள்கள் வழியே வெளிப்படுகின்றன.

**இயற்கையும் சங்க இலக்கியமும்**

சங்ககாலம் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த காலம். எனவே தமிழ் இலக்கியங்களின் தோற்றமும் இயற்கை வழிப்பட்டது. பழந்தமிழரின் வாழ்க்கை, தமிழக இயற்கைச் சூழ்நிலைக்கு ஏற்பவே இருந்தன என்பதற்கு தொல்காப்பியப் பொருளதிகாரம் சான்றாகும். சங்க காலத்தினை ஆய்வறிஞர்கள் 'இயற்கை நெறிக்காலம்' என்கின்றனர். 'தமிழன் மரபே இயற்கை. பழந்தமிழன் இயற்கையின் வயிற்றிலே தன்னை ஒப்படைத்து வாழ்வை நடத்தியவன். அவனுடைய வாழ்வே இயற்கையின் திருவுரு எனலாம். புறவாழ்வை மட்டுமன்றி அகவாழ்வையும் இயற்கையே உருவாக்கிற்று' 1 (கதிர் மகாதேவன், ஒப்பிலக்கிய நோக்கில் சங்ககாலம், ப.18.) என்னும் கருத்தும் இயற்கை மனித வாழ்வோடு இயைந்தது என்பதை வலியுறுத்துகிறது. அகம், புறம் எனப் பிரிக்கப்பெற்ற சங்க இலக்கியங்களுள் அகப்பாடல்களில் இயற்கைப் புனைவுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. புறப்பாடல்களிலும் இயற்கை வருணனைகள் வந்துள்ளன. பழந்தமிழ்ப் புறப்பாடல்களில் நில வருணனைகள் இயற்கை வருணனைகளாக அமைந்துள்ளன. நக்கீரர், "கைப்புனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு" - திருமுருகா.அடி.17 என இயற்கையைச் சிறப்பிக்கிறார். 'இயற்கையின் ஒவ்வொரு பகுதியையும் பகுத்துப் பாடியவர்கள் பண்டைத் தமிழ்ப் பாவலர்கள். காதல், வீரம் என்பனவற்றைத் தலைமைக் கூறுகளாகக் கொண்டு பிற பல கூறுகளையும் துணையாகப் பெற்றுள்ளது மனித வாழ்க்கை. அத்தகைய மனித வாழ்க்கையின் பல்வேறு கூறுகளையும் வருணித்துத் தெளிவுபடுத்துவதற்காகவே பண்டைத் தமிழ்ச் சான்றோர் இயற்கையைப் பயன்படுத்தினர்." 2 (மு. வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.402.) என்னும் கருத்து சங்க இலக்கியத்தில் இயற்கையின் இடத்தை விரிவாகப் புலப்படுத்துகிறது. சங்க இலக்கியத்தில் இயற்கைப் புனைவுகள் மிகுதியாக இருப்பினும், இவைதனி இயற்கைப் பாடல்களாக இல்லை. இவற்றில் இயற்கை, திணையமைப்புக்காகவும் மனிதவாழ்க்கையின்

*(முப்பொருள்) பின்புலத்திற்காகவும் பாடப்பெற்றுள்ளன. 'இயற்கையை இயற்கைக்காகவே பாடும் நிலை - அதனைத் தனிப்பொருளாகக் கொண்டு கருத்துரைக்கும் துறை சங்க காலத்தில் இருந்ததில்லை. மக்களின் ஒழுகலாற்றிற்கும் சிறப்பாகக் காதலொழுக்கத்திற்கும் பக்கப் பொருளாகப் பாடும் சார்புநிலையே இயற்கைக்கு அன்றைய இலக்கியத்தில் இடமாய் இருந்தது' 3 (வ. சுப. மாணிக்கம், தமிழ்காதல் ப.04.) எனும் கருத்துவழி அறியமுடிகிறது.*

**இயற்கையும் பத்துப்பாட்டும்**

*சங்க இலக்கியங்களில் ஐவகை நிலங்கள், அந்நிலங்களுக்கான பொழுதுகள், மலர்கள், செடிகள், கொடிகள், மரங்கள், ஆறுகள், மலைகள் போன்ற இயற்கை சார்ந்த செய்திகளை வருணனை என்னும் அழகியல் உத்தியோடு பயன்படுத்தியுள்ளமை நாம் அறிந்ததே. இலக்கியங்களைப் படைப்பதில் கையாளும் அழகியல் உத்திகளுள் வருணனை முக்கிய இடம்பெறுகிறது. இவ்வருணைகள் அடியளவில் குறுகிய எட்டுத்தொகைத் தன்னுணர்ச்சிப் பாடல்களில் சுருக்கமாகவும் காப்பியம் நோக்கிய வளர்ச்சியைக் காட்டும் பத்துப்பாட்டில் விரிவாகவும் காணப்படுகின்றன.*

*தொல்காப்பியத்தில் வருணனை குறித்து நேரடியான இலக்கணக் குறிப்புகள் காணப் படவில்லை. ஆயினும், எண்வகை வனப்புகளில் ஒன்றான தொடர்நிலைச் செய்யுளுக்குரிய 'தோல்' (தொல்.பொருள். செய்யு. நூ. 230) பற்றிக் கூறுமிடத்து அதில் வருணனை பயன்படுத்தப்படும் கூறு உள்ளது. இதனைப் பத்துப்பாட்டில் காணமுடிகிறது. எனவே 'தோல்' என்னும் வனப்பு வருணனையை உள்ளடக்கியதாகக் கருத முடிகிறது. பழந்தமிழ்ப் புலவர்கள் இயற்கை வருணனை, இறைவருணனை, மகளிர் உறுப்புநல வருணனை, யாழ் வருணனை, விலங்குகள் மற்றும் பறவைகள் வருணனை, இட வருணனை, போர்க்கள வருணனை எனப் பலவாகப்பாடியுள்ளனர்.*

**பத்துப்பாட்டில் நிலங்களும் தன்மைகளும்**

*பழந்தமிழ் மரபு தாம்வாழும் நிலத்தை ஐவகையாகப் பிரித்து, அவற்றின் தன்மைக்கேற்ப அவற்றுக்குப் பெயரிட்டு அழைத்துள்ளது. நிலங்களை அவற்றின் கருப்பொருட்களின் துணைக் கொண்டு விளக்கப்பட்டுள்ளன. பத்துப்பாட்டு ஆற்றுப்படைப் பாடல்களில் நிலங்களை வருணனை உத்தி வழியே விரிவாக விளக்கியுள்ளமை அறியமுடிகிறது. குறிஞ்சி நிலங்கள் - குறிஞ்சி நிலக் கருப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு அந்நிலத்தின் எழிலுரு தோற்றம் வருணனை செய்யப்படுகின்றது. சிறுபாணாற்றுப்படையில், குறிஞ்சி நிலத்தின் சிறப்புகளாக,*

***"மணிமயில் கலாபம் மஞ்சுஇடைப் பரப்பி,***
***துணிமழை தவழும் துயல்கழை நெடுங்கோட்டு***
***எறிந்துஉரும் இறந்த ஏற்றுஅருஞ் சென்னிக்***
***குறிஞ்சிக் கோமான் ..." - சிறுபாண். 265-268***

*என்று சொற்களால் காட்சிப்படுத்தப்படுகிறது. "நீலமணி போன்ற மயில் தன் தோகையை மேகங்களுக்கு இடையே விரித்து ஆடுதலும்; தெளிந்த மழையினைத் தரும் கருமேகங்கள் தவழும் மலையில் நீண்ட மூங்கில் மரங்கள் செழித்து விளங்குவதால் இடி யேறு கூட, தான் அப்பால் செல்லத் தடையாதல் கருதி இடித்துச் செல்லும் மலை நாட்டான் தலைவன் - குறிஞ்சிக் கோமான் நல்லியக்கோடான்" என்ற நல்லியக்கோடனின் சிறப்பு கூறுமிடத்து மலைநாட்டு நிலச்சூழல் எடுத்துரைக்கப்படுகிறது.*

*மதுரைக் காஞ்சியில், குறிஞ்சி நிலப் பகுதியின் கருப்பொருட்கள் வருணனையாகச் சுட்டப்பட்டு, மலைநெல்லை விதைத்தல், கிளி கடிதல், காட்டுப் பன்றியை வேட்டையாடுதல், ஆநிரைகளை ஓட்டுதல், வேங்கை மலர்களைக் கண்டு கானவர் மகளிர் 'புலி! புலி!!' என ஆரவாரித்தல் போன்ற செயல்பாடுகள் கூறப்பட்டு, இச்செயல்பாடுகளால் உண்டான ஒலிகளும், அங்குள்ள அருவிகளும் வருணனை வழியே விளக்கப்படுகிறது.*

***"நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய***
***குறுங்கதிர்த் தோரை, நெடுங்கால் ஐயவி***
***அருங்கடி மாமலை தழீஇ ஒருசார்"***

***- மதுரைக். அடிகள் 286-301***

*கதிர், ஐயவிக்கடுகு, ஐவனவெண்ணெல், இஞ்சி, மஞ்சள், மிளகு, தினை, அவரை, வேங்கை ஆகியபயிரினங்களும், கேழல், புலி, கிளி ஆமா ஆகிய உயிரினங்களும் கருப்பொருளாக அமைய இவற்றின் இயல்பையும் பொலிவையும் ஆங்கு எழும் பூசலோடு இயைத்து மிக நீண்ட வருணனையில் குறிஞ்சி நிலச் சூழலை மாங்குடிமருதனார் விளக்குகிறார்.*

*முல்லை நிலங்கள் - முல்லைப்பாட்டு முழுவதுமே, முல்லைநிலத்தின் வழியிலுள்ள பல்வகைத் தாவரங்கள், அவற்றின் மலர்கள், அம்மலர்களின் வண்ணங்கள் கூறப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் வருணனை, முரண், உவமை, அடைபுணர் தொடர் போன்ற எல்லாவற்றிலும் வண்ணங்கள் (நிறங்கள்) இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. தமிழர்கள் வண்ணங்களுக்கு முக்கியத்துவம்தந்தவர்கள் என்பதை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. வண்ணங்கள் ஆதிஇனக்குழுக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்ததை மானுடவியலார் எடுத்துக்காட்டியுள்ளமை நோக்கத்தக்கது. அவ்வகையில், அமைந்த முல்லைப்பாட்டுப் பாடற்பகுதி,*

***"செறியிலைக் காயா அஞ்சனம் மலர//***
***முறியிணர்க் கொன்றை நன்பொன் கால//***
***கோடல் குவிமுகை அங்கை அவிழ//***
***தோடுஆர் தோன்றி குருதி பூப்ப//***
***கானம் நந்திய செந்நிலப் பெருவழி// வானம்***
***வாய்த்த வாங்குகதிர் வரகின் //***
***திரிமருப்பு இரலையொடு மடமான் உகள//***
***எதிர்செல் வெண்மழை பொழியும் திங்களில் //***
***முதிர்காய் வள்ளிஅம் காடு"***

***- முல்லைப். அடி. 94-101***

"*பகைவரை வென்று, அவர்தம் நிலங்களைக் கவர்ந்த படையுடனும் வெற்றிக் கொடியுடனும் பெரிய முழக்கத்துடனும் மன்னன் - தலைவன் வரும் முல்லை நிலவழியில், மழையினால் செழித்து வளர்ந்த அஞ்சனம்போலக் காயாமலர்கள் மலர்ந்திருக்கின்றன; தளிரையும் கொத்துக்களையும் உடைய கொன்றை, பொன் போன்ற மலர்களைச் சொரிகின்றன; வெண்காந்தளின் குவிந்த முகைகள், அழகிய கைபோல விரிந்துள்ளன; இதழ்கள் நிறைந்த தோன்றி மலர்கள், உதிரம்போலப் பூத்திருக்கின்றன; காடு செழித்த முல்லைநிலப் பெரியவழியிலே, வேண்டும் பருவத்தே மழைபெய்யப் பெற்றதால் நன்கு விளைந்த கதிரினையுடைய வரகிடத்தே முறுக்குண்ட கொம்புகள் கொண்ட இரலை மான்களுடன் மடப்பத்தையுடைய மான்கள் துள்ளி விளையாடுகின்றன; இனிமேல் பெய்தற்காகச் செல்லும் வெண்முகில் மழையைப் பொழிதற்குரிய கார்காலம் இத்தகையது" என முல்லை நில அமைப்புகள் விளக்கப்படுகின்றன.*

*சிறுபாணாற்றுப்படையில் இடம்பெறும் பின் வரும் முல்லைநிலச் சூழலை கருப்பொருட்களின் தன்மையைக் கொண்டு விளக்குகிறது.,*

***"பைந்நனை அவரை பவழம் கோப்பவும் // கருநனைக் கணமயில் அவிழவும் // கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவும் // செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும் // கொல்லை நெடுவழிக் கோபம் ஊரவும் //முல்லை சான்ற முல்லைஅம் புறவு" - சிறுபாண். அடி. 164-167***

*மருதம் நிலங்கள்-மருதம் குளிர்ச்சியை உடைய நிலப்பகுதி. இதனாலேயே அது மருதத்தண்பனை என்றும், தண்ணடை என்றும் அழைக்கப்படுகிறது. இத்தகு குளிர்ச்சிக்குக் காரணமாக இயற்கைச்சூழலை, பெரும் பாணாற்றுப்படையில் காணமுடிகிறது.*

***"ஞாங்கர்க் குடிநிறை வல்சிச் செஞ்சா லுழவர்***
***தண்பணை தழீஇய தளரா இருக்கை"***

***- பெரும்பாண். அடி.195-240***

*மருதநிலத்தில்வாழும்உழவர்குடியிருப்புகளும் உழவுத்தொழிலில் பயிற்சிப்பெற்ற எருதுகள், ஏர்கலப்பை, வயலினை உழுது, விதைத்து, களையெடுத்தல், நாற்றுநடுதல், பயிர் அறுக்கும் பருவம் போன்றவைப்பற்றிய செய்திகளும் உழவர்களின் பிள்ளைகள் -*

களையெடுப்போர் போட் நெய்தல் மலரையும் முள்ளி மலரையும் சூடிக்கொண்டும், கோரையினது காயை முறித்து அதிலிருக்கும் மகரந்த பொடியை தம்மேனியில் பூசியும், அவர்கள் குடில்களின் முன்னர் அவல் இடித்தும் எப்போதும் ஆரவாரமாக காட்சி தருவதாக மருதநிலங்களின் வளமையான சூழ்நிலை விவரிக்கப்படுகிறது.

**நெய்தல் நிலங்கள்**

நெய்தல் நிலங்கள் சங்ககால செல்வ செழிப்புநிரம்பியனவாக இருந்துள்ளன. இரங்கல் இரங்கல் நிமித்தங்களை உரிப்பொருளாக கொண்டபோதும் வாணிகம் சிறப்படைந்த நிலவமைப்பாக இருந்துள்ளன.

**"எல் இடை கழியுநர்க்கு ஏமம் ஆக**
**மலையவும் கடலவும் மாண் பயம் தரூஉம்**
**அரும்பொருள் அருத்தும் திருந்துதொடை நோன்தாள்**
**அடி.."** **- பெரும்பாண். அடி.66-80**

பெரும் பாணாற்றுப்படையில் இடம் பெறும் உமணர் வாழ்வு, சாத்து வாணிகர், எயினர் வாழ்வு (பெரும்பாண். அடி.83-94), நெய்தல் நில வளங்களை விளக்குகின்றன.

**பாலை நிலங்கள்**

சங்க இலக்கியங்களில் அதிகமாக பாலைச் நிலச்சூழலே பாடப்பட்டுள்ளன. பிரிவினை உணர்த்தி அன்பின் ஆழத்தைக் காட்டும் பாலைப் பாடல்கள் சங்க இலக்கியத்தில் பெருவிரவினவாக உள்ளன. இப்பாலை நிலப் பாடல்களில் விளக்கப்பெறும் பாலை நில இயல்பு கொடுமையும் கடுமையும் நிறைந்திருக்க, பிரிந்து செல்லும் தலைவன், என்ன துயருருவானோ? எனத் தலைவியும் தோழியும் வருந்துவதாக பாடப்பட்டுள்ளன.

**"முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**
**நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவங் கொள்ளும்"**
**- சிலப்ப.காடுகாண்.அடி.64-66**

என்றுபாலைநிலம்வரையறுக்கப்பட்டுள்ளது. இக்குறிப்பில் நல்லியல்பு திரிதலும் நடுங்குதுயர் உறுதலும் பாலைக்கு மட்டுமன்றி அதன்வழிச் செல்வோர் இயல்பும் என்பதைப் பாலைப்பாடல்கள் காட்டுகின்றன.

**"அயில் உருப்பு அனைய ஆகி ஐது நடந்து**
**வெயில் உருப்புற்ற வெம்பரல் கிழிப்ப**
**வேனில் நின்ற வெம்பத வழி நாள்**
**காலை ஞாயிற்றுக் கதிர் கடா உறுப்ப**
**பாலை நின்ற பாலை நெடுவழி**
**சுரன் முதல் மராஅத்த வரி நிழல் அசைஇ"**
**-சிறுபாண்.அடி. 7-12**

இரும்பின் வெப்பத்தைப் போன்று சூடுடைய கூர்மையான பரல் கற்கள் தங்கள் கால்களைக் கிழித்ததால் பாணர் கூட்டம் மெல்ல நடந்து சென்று, முதுவேனில் காலத்தின் காலை பொழுதில் வெப்பமான கதிரவன் தன் மிகுதியான வெப்பக் கதிர்களால் நிலமுழுக்க பரப்ப, வறண்ட பாலைத் தன்மை கொண்ட நீண்ட பாலை வழியை சுரத்தில் உள்ள கடம்ப மரத்தின் வரிகளாக உள்ள நிழலில் தங்கி, கடந்தனர் என்று பாலை நில தட்பவெப்பத்தை காட்சிப்படுத்துகிறது.

**முடிவு**

பண்டையதமிழ் இலக்கியங்கள்நிலவியல் சார்ந்த கருத்தாக்கங்களை மிகுதியாக உள்ளடக்கியுள்ளன. தொல்காப்பியரின் முப்பொருள் பண்பாடும் பத்துப்பாட்டு கூறும் இலக்கியப் பதிவுகளும் தமிழரின் நிலவியல் அறிவிற்கு சான்றாகின்றன. முதற்பொருள் என்று சொல்லப்படும் நிலமும் பொழுதும் அன்றைய மக்களின் திட்டமிட்ட அறிவியல் வாழ்வை வெளிப்படுத்துகிறது. இக்கட்டுரையின் தரவுகளும் கருத்துகளும் பழந்தமிழர் நிலம் சார்ந்த வாழ்வியல் பண்பாட்டுச் சிந்தனைகள் மேம்பட்டதாக நிறுவுகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. இளம்பூரணர் (உ.ஆ.),தொல்காப்பியர், தொல்காப்பியம் - பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை. (1967).
2. சோமசுந்தரனார் பெருமழைப் புலவர் (உ.ஆ),நக்கீரர், திருமுருகாற்றுப்படை, கழக வெளியீடு, சென்னை.(1969).
3. நச்சினார்க்கினியர் (உ.ஆ), பத்துப்பாட்டு, உ.வே.சா (தொ.ஆ.), தமிழ்ப் பலைக்கழகம், தஞ்சாவூர் (1986).

4. மகாதேவன் கதிர்., ஒப்பிலக்கிய நோக்கில் சங்ககாலம், இலட்சுமி வெளியீடு, மதுரை. (1977).
5. மாணிக்கம், வ. சுப., தமிழ்க்காதல், சாரதா பதிப்பகம், சென்னை. (2007).
6. வரதராசன் மு., பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பாரி நிலையம், சென்னை. (2006).